04.11.2016

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு குறைப்பு

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 2 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு நொடிக்கு 4 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. அணையின் நீர்மட்டம் வேகமாகச் சரிந்து வருவதால், வியாழக்கிழமை பகல் 1 மணிக்கு பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 2 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. வியாழக்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 44.19 அடியாக சரிந்தது. அணைக்கு நொடிக்கு 1,072 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

### விவசாய மின் இணைப்புக்கு 4.50 லட்சம் பேர் காத்திருப்பு: மாற்றுக் கொள்கை அவசியம்



விவசாய மின் இணைப்பு கோரி சுமார் 4.50 லட்சம் பேர் காத்திருக்கும் நிலையில், வேளாண் உற்பத்தியும், விவசாயிகள் வாழ்வாதாரமும் பாதிக்கப்படாமல் இருக்க புதிய கொள்கையினை உருவாக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏரி மற்றும் ஆற்றுப் பாசனப் பரப்பளவு குறைந்து, தமிழகத்தின் மொத்த விவசாயப் பரப்பளவில் 55 சதவீதம் நிலத்தடி நீரைப் பயன்படுத்தித்தான் விவசாயம் என்ற நிலைமை மாறியிருக்கிறது. சுயநிதித் திட்டத்தில் பணம் கட்டினால் உடனே மின் இணைப்பு கிடைத்து விடும் என நம்பி பணம் கட்டிய விவசாயிகளும் 10 ஆண்டுகளுக்கு மேலாக காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.

விவசாய சங்கங்களுக்கு மின் வாரியம் அளித்துள்ள புள்ளிவிவரப்படி, தமிழகத்தில் விவசாயத்துக்கு மின் இணைப்பு கோரி காத்திருப்பவர்கள் மட்டும் 31.3.2016 வரை 4 லட்சத்து 28 ஆயிரத்து 767 பேர். இதில் தயார் நிலையில் உள்ளவர்கள் மட்டும் 40 ஆயிரத்து 998 பேர்.

இவர்களில் சுயநிதித் திட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டுக்கு முன்பு 50 ஆயிரம் ரூபாய் பணம் கட்டிவிட்டு காத்திருப்பவர்கள் மட்டும் 1,05,082 பேர். 2007 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை 25 ஆயிரம் ரூபாய் கட்டிவிட்டு காத்திருப்பவர்கள் 80 ஆயிரத்து 481 பேர். 4 லட்சத்து 28 ஆயிரத்து 767 பேரில் 31.03.2000-க்கு முன்பு விண்ணப்பித்து காத்திருப்பவர்கள் மட்டும் 2 லட்சத்து 3 ஆயிரத்து 357 பேர். விவசாயத்துக்கு மின் இணைப்புக் கோரி காத்திருக்கிற அனைத்து விவசாயிகளுக்கும் வரிசை முன்னுரிமை அடிப்படையில் காலவரையறை தீர்மானித்து குறிப்பிட்ட காலத்துக்குள் மின் இணைப்பு வழங்க அரசு முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க பிரதிநிதி பழனிச்சாமி கூறியது: விவசாய மின் இணைப்பு, சுய நிதித் திட்டத்தில் 50 ஆயிரம் ரூபாய் முன்னுரிமை பிரிவில் மின் வழித்தடம் அமைக்க தற்போது 1 லட்சம் ரூபாய் கூட வழங்கத் தயாராக உள்ளோம். ஆனால், மின் வாரிய அதிகாரிகள் மின் இணைப்பு வழங்கத் தயாராக இல்லை.

தற்போது 50 ஆயிரம் ரூபாய் முன்னுரிமை பிரிவில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இதனால், மின் வாரியத்துக்கு, பல

ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மின் இணைப்பு கிடைக்காததால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், வேளாண் உற்பத்தியும் பாதிக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.

கடும் வறட்சி காரணமாக நிலத்தடி நீரை நம்பி விவசாயம் செய்பவர்களில் 90 சதவீதம் பேர் கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேல் விவசாயத்தை முழுமையாக கைவிட்டு விட்டனர். வாய்க்கால்களில் உள்ள தென்னை மரங்கள் கூட காய்ந்து போய் விட்டன.

தற்போது உள்ள 21 லட்சம் விவசாய மின் இணைப்புகளில் 10 லட்சம் மின் இணைப்புகள் கடந்த 5 ஆண்டுகளாக முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. 5 லட்சம் மின் இணைப்புகள் தினமும் 3 மணி நேரத்துக்கும் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன. 5 லட்சம் மின் இணைப்புகள்தான் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

50 சதவீத மின் இணைப்புகள் முழுமையாகப் பயன்பாடு இல்லாத நிலையில், விவசாயத்துக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதால் ஆண்டுக்கு ரூ.3,500 கோடி செலவாகிறது என்பதை ஏற்க இயலாது. இதனால் விவசாயப் பணிக்கு கட்டாயத் தேவை உள்ள இடங்களில் உடனடியாக மின் இணைப்பு வழங்க புதிய கொள்கையை மின் வாரியம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இதுகுறித்து, மின்வாரியத் துறை உயரதிகாரிகளிடம் கேட்டபோது, சுயநிதித் திட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. ஓராண்டுக்கு வழங்க வேண்டிய விவசாய மின் இணைப்பின் எண்ணிக்கையை தமிழக அரசு, மின் வாரியத்துக்குத் தெரிவிக்கும்.

அதன் அடிப்படையில் மாவட்டந்தோறும், இலவச மின் இணைப்பு ஒதுக்கீடு செய்யப்படும்.

தற்போது 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவு பிரிவில் 2001ஆம் ஆண்டு, 25 ஆயிரம் ரூபாய் 2008ஆம் ஆண்டு, 50 ஆயிரம் ரூபாய் 2010ஆம் ஆண்டுக்கு முன்பதிவு செய்தவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மின் பற்றாக்குறை நிலவுவதால், விவசாயத்துக்கு விண்ணப்பித்த உடனேயே மின் இணைப்பு வழங்கப்படுவதில்லை. இருப்பினும், அரசு கூடுதலாக

அனுமதி வழங்கினால் அதற்கேற்ப, அதிக எண்ணிக்கையில் விவசாய மின் இணைப்பு வழங்கப்படும்.

விவசாய இணைப்புக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதால், மின் வாரியத்துக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.3,500 கோடி வரை செலவாகிறது. இதை தமிழக அரசு மின் வாரியத்துக்கு மானியமாக வழங்குகிறது என்றனர்.

**தினமலர்**

## இன்றைய வேளாண் செய்திகள்

### இயற்கையில் வெந்நீர்

மழை, குளிர்காலத்தில் வெந்நீருக்காக 'கெய்சர்' விற்பனை அதிகரிக்கும். நிலத்தடி நீரே வெந்நீராக வரும் வகையில் இமாசலப்பிரதேசத்தில் உள்ள குலு மலைவாசஸ்தலத்தில் மணிகரன் என்னுமிடத்தில் வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. இந்த வெந்நீர் ஊற்றின் மிக அருகில் ஓடும் நதியின் நீர் குளிர்ச்சியாக உள்ளது. அரிசியை துணியில் கட்டி மூழ்க வைத்தால் சாதமாக மாறும் அளவிற்கு வெந்நீர் ஊற்றின் கொதிநிலை உள்ளது. பீகாரில் ராஜ்கீரிலும் இது போன்று வெந்நீர் ஊற்றுகள் உள்ளன.

### தொடரும் பருவமழை: சம்பா விவசாயிகள் மகிழ்ச்சி

தஞ்சாவூர்: வடகிழக்கு பருவமழையால், டெல்டா மாவட்ட, சம்பா சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நடப்பாண்டு, தமிழகத்தில், 11.8 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி துவங்கியுள்ளது.

டெல்டா மாவட்டங்களில், 5.52 லட்சம் ஏக்கரில் தான் நடந்துள்ளது. கர்நாடக அரசு, காவிரியில் முறையாக நீர் திறந்து விடவில்லை. மேலும், சம்பா சாகுபடிக்காக, மேட்டூர் அணையில் இருந்து நீர் திறந்து விடப்பட்டதால், அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. ஒரு வாரத்திற்கு கூட, மேட்டூர் அணையில் நீர் இருக்காது என்ற நிலையில், டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி கேள்விக்குறியாக இருந்தது. இந்நிலையில், கடந்த நான்கு நாட்களாக,

வடகிழக்கு பருவமழை, தமிழகம் முழுவதும் பரவலாக பெய்து வருகிறது. இதனால், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட, ஐந்து மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்களுக்கு பாதிப்பு இருக்காது என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

இது குறித்து, தஞ்சை மாவட்ட விவசாயிகள் கூறியதாவது: வட கிழக்கு பருவமழையை பயன்படுத்தி நடக்கும், சம்பா சாகுபடியில் தான், அதிக அளவில் நெல் உற்பத்தி இருக்கும். இந்த ஆண்டு, வடகிழக்கு பருவமழை அளவு இயல்பாக இருக்கும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மழை நீர், வீணாக கடலில் கலப்பதை தடுக்க வேண்டும். குளம், ஏரி போன்ற நீர் நிலைகளை, மழை நீர் முழுமையாக சென்றடைய வேண்டும். தமிழக அரசும், அதிகாரிகளும், வடகிழக்கு பருவமழையை முழுமையாக பயன்படுத்த செயல் திட்டம் தீட்டினால், விவசாயம் பாதிக்கப்படாது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மஞ்சளாறு அணைக்கு ஓராண்டிற்குப்பின் நீர் வரத்து**

தேவதானப்பட்டி, மஞ்சளாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் ஓராண்டிற்குப்பின் பிறகு அணைக்கு நீர்வந்து கொண்டிருக்கிறது, தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்ளாறு அணையின் உயரம் 57 அடியாகும். மேற்குத் தொடர்ச்சி மலை பகுதியில் உள்ள வரட்டாறு, மூலாறு, மஞ்சளாறு, தலையாறு ஆகிய நீர்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழைநீர் அணையில் தேங்குகிறது.

இந்த நீரை ஆதாரமாக கொண்டு தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் 5 ஆயிரத்து 200 ஏக்கர் நிலங்கள் பாசனவசதியைப் பெற்று முதல்போக நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த ஓராண்டாக அணையின் நீர்பிடிப்பில் மழை இல்லை. இதனால் அணைக்கு நீர்வரத்து இல்லை. தற்போது அணையில் 35 அடிநீர் உள்ளது. இந்நிலையில் சில நாட்களுக்கு முன் நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்தது. இதனால் அணைக்கு 25 கனஅடிநீர் வந்து கொண்டிருக்கிறது.

## மாவட்டத்திற்கு தேவை 4,000 டன் உரம்இருப்பு 6,000 டன்

கம்பம், 'தேனி மாவட்டத்திற்கு விவசாயிகளுக்கான உரத்தேவை 4 ஆயிரம் டன். ஆனால் 6 ஆயிரம் டன் வரை இருப்பு வைக்கப்பட்டுள்ளது,'என, வேளாண் துறை அறிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால் கம்பம் பள்ளக்தாக்கில் முதல் போக நெல் சாகுபடியில் சிக்கல் ஏற்பட்டது. தற்போது பெய்யத் துவங்கியுள்ள வடகிழக்கு பருவமழையால், இரண்டாம் போக நெல் சாகுபடி நல்ல முறையில் இருக்கும் என்றும் அதிகாரிகள் கருதுகின்றனர். மேலும் நெல் தவிர பிற பயிர் சாகுபடிக்கும் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் கட்டுப்பாடின்றி கிடைக்க வேண்டும். சில சமயங்களில் குறிப்பிட்ட உரங்கள் கடைகளில் தட்டுப்பாடு இருக்கும். இதனால் விவசாயிகள் கடும் நெருக்கடியை சந்திப்பார்கள்.

இந்த ஆண்டு உரம் மற்றும் பூச்சி மருந்துகளில் கட்டுப்பாடு ஏற்படாதபடி இருக்க உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட வேளாண் இணை இயக்குனர் மூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் இருப்பு விபரங்களை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) கே.ஆர்.ஜெயப்பாண்டியன் வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது :

வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளது. கம்பம் பள்ளத்தாக்கில் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பிரச்னை இருக்காது.

அனைத்து வித பயிர்களுக்கும் தேவையான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நவம்பர் மாதத்திற்கு யூரியா ஆயிரத்து 300 டன் தேவை. கூட்டுறவு சங்கங்களிலும், தனியார் கடைகளிலும் சேர்த்து ஆயிரத்து 900 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல டி.ஏ.பி., உரம் 450 டன் தேவைக்கு பதிலாக, ஆயிரத்து 56 டன்னும், பொட்டாஷ் உரம் 900 டன் தேவைக்கு, பதிலாக ஆயிரத்து 217 டன்னும், காம்ப்ளக்ஸ் உரம் ஆயிரத்து 350 டன் தேவைக்கு, பதிலாக ஆயிரத்து 950 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திற்கு மொத்த உரத் தேவை 4 ஆயிரம் டன்னாகும். தற்போது 6 ஆயிரத்து 123 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு வெள்ளைநிற தண்ணீரில் கரையும் பொட்டாஷ் ஆயிரத்து 100 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மூடை ஒன்றின் விலை ரூ. 550 ஆகும். விவசாயிகளுக்கு தேவையான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தட்டுப்பாடு இருப்பதாக விவசாயிகள் கருதினால் உடனடியாக, மாவட்ட உதவி இயக்குனரை (தரக்கட்டுப்பாடு) 94423 33999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணையின் நீர்திறப்பு உயர்வு**

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்திறப்பு 2 ஆயிரம் கனஅடியிலிருந்து 3ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்வரத்து 1,030 கனஅடியாகவும், நீர்மட்டம் 40.92 அடியாகவும், நீர் இருப்பு 14.19 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் நீர்திறப்பு 2 ஆயிரம் கனஅடியிலிருந்து 3ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**வரத்து குறைந்ததால் மல்லிகை விலை உயர்வு**

ப.வேலூர்: ப.வேலூர் எடையளவு மார்க்கெட்டில், மல்லிகை விலை 400 ரூபாயாக உயர்ந்தது. ப.வேலூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளான கொளக்காட்டுப்புதூர், பாலப்பட்டி, எல்லைமேடு, பரமத்தி மற்றும் கரூர் மாவட்டத்தில் மல்லிகை, சம்பங்கி, முல்லை போன்ற பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அவை அறுவடை செய்யப்பட்டு, ப.வேலூரில் நடக்கும் எடையளவு மார்க்கெட்டில் ஏலம் விடப்படுகின்றன. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், மல்லிகை, கிலோ, 240 ரூபாய், முல்லை, 240 ரூபாய், அரளி, 90 ரூபாய், சம்பங்கி, 80 ரூபாய், கோழிக்கொண்டை பூ, கட்டு, 30 ரூபாய், மரிக்கொழுந்து கட்டு ஒன்று, 10 ரூபாய்

வரை விற்பனை செய்யப்பட்டது. நேற்று நடந்த ஏலத்தில், மல்லிகை, 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. முல்லை, 400 ரூபாய், பட்டன் ரோஸ், 240 ரூபாய், அரளி, 90 ரூபாய், சம்பங்கி, 80 ரூபாய், கோழிக்கொண்டை பூ ஒரு கட்டு, 30 ரூபாய், மரிக்கொழுந்து கட்டு ஒன்று, 10 ரூபாய் வரை ஏலம் போனது. மல்லிகை வரத்து குறைந்ததால், அதன் விலைஉயர்ந்துள்ளது.

## விதைநெல் சாகுபடி விழிப்புணர்வு பேரணி

ப.வேலூர்: ப.வேலூர் அடுத்த, கு.அய்யம்பாளையத்தில், விதைநெல் சாகுபடி பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பேரணி நடந்தது. மாவட்ட உதவி வேளாண்மை இயக்குனர் கலியராஜ் தலைமை வகித்தார். இதில், காவிரி கரையோர பகுதிகளில் நெல், வாழை, கரும்பு, சிறு தானியங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இதற்கான விதைகளை வெளியூர்களிலிருந்து வாங்கி விவசாயிகள் பயிரிடுகின்றனர். வறட்சி பகுதியான, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் விவசாயிகள், விதை நெல் உற்பத்தி செய்து வெளிமாவட்டங்களுக்கு தருகின்றனர். அதேபோல், நாமக்கல் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ஒரு குழுக்களாக இணைந்து, விதைநெல் மற்றும் சிறுதானிய விதைகளை உற்பத்தி செய்தால், வெளிமாவட்ட விவசாயிகள் நேரடியாக கொள்முதல் செய்வதால் லாபம் அதிகரிக்கும், என எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இதுகுறித்து பள்ளி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடந்தது.

## காய்கறிகள் சாகுபடி இலவச பயிற்சி முகாம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் அகிலா வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 10ல், 'கொடி வகை காய்கறிகள் சாகுபடி தொழில்நுட்பங்கள்' என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி முகாம் நடக்கிறது. இதில், கொடிவகை காய்கறிகளில் புதிய ரகங்கள், பருவம், விதை அளவு, விதை நேர்த்தி. பயிர் இடைவெளி, உர மேலாண்மை, நுண்ணூட்ட மேலாண்மை பூச்சி மற்றும் நோய் நிர்வாக முறைகள் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்பங்களும் விரிவாகக் கற்றுத்தரப்படும். விருப்பமுள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ, அல்லது, 04286 - 266 345,

266 650 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ, வரும், ஒன்பதாம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## பஞ்சு விலை குறைவால் நூல் விலை கிலோவுக்கு ரூ.30 குறைந்தது




கோவை : தென்னிந்திய நூல் மில்களில் 29 என்எம் கொண்ட சங்கர் பஞ்சு மூலம் நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இது குஜராத்தில் இருந்து வரவழைக்கப்படுகிறது. இந்த பஞ்சு, ஒரு கண்டி (355 கிலோ) விலை கடந்த ஏப்ரலில் ரூ.35 ஆயிரமாக இருந்தது. பின்னர் பதுக்கல் காரணமாக பஞ்சு விலை உயர துவங்கியது. மே மாதத்தில் ரூ.40 ஆயிரமாகவும், ஜூன் மாதத்தில் ரூ.44 ஆயிரம் வரையும், ஜூலை மாதத்தில் ரூ.51 ஆயிரம் வரையும், ஆகஸ்ட் மாதத்தில் ரூ.54 ஆயிரம் வரையும் உயர்ந்தது.

இதனால், மே மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான 4 மாதத்தில் ரூ.19 ஆயிரம் வரை பஞ்சு விலை உயர்ந்தது. அதற்கு ஏற்ப, நூல் விலையும் கிலோவிற்கு

ரூ.32 வரை உயர்ந்தது. பின்னர், கடந்த செப்டம்பர் மாதம் துவக்கம் முதல் வெளிநாட்டு பஞ்சு வரத்து மற்றும் பதுக்கல் பஞ்சு வெளியேற்றம் காரணமாக பஞ்சு விலை குறைய துவங்கியது. அக்டோபரில் ரூ.45 ஆயிரத்திற்கு குறைந்தது. இந்நிலையில் கடந்த மாதத்தில் வட மாநிலங்களில் இருந்து அறுவடை பஞ்சு வரத்துவங்கியதால், கடந்த சில நாட்களாக பஞ்சு விலை ரூ.38 ஆயிரத்திற்கு குறைந்துள்ளது. இதற்கு ஏற்ப நூற்பாலைகளும் பஞ்சு விலையை கிலோவிற்கு ரூ.30 வரை குறைத்துள்ளன.

**புதன்சந்தையில் ஆடுகளின் விலை உயர்வு**

சேந்தமங்கலம்: நாமக்கல் மாவட்டம் புதன்சந்தையில் ஆடுகளின் விலை உயர்ந்துள்ளது. நாமக்கல் மாவட்டம், புதன்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்ற பெரிய சந்தையாகும். இங்கு, வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் மாட்டுச்சந்தையும், புதன்கிழமைகளில் ஆட்டுச்சந்தையும் கூடுவது வழக்கம். சுற்றுப்புற பகுதியில் இருந்து ஏராளமான ஆடுகள், குட்டிகள், கிடா விற்பனைக்கு வரும்.

இதனை வாங்க நாமக்கல், சேந்தமங்கலம், எருமப்பட்டி, பவித்திரம், புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் வருவர்.நேற்று முன்தினம் கூடிய ஆட்டுச்சந்தையில் சுற்றுப்புற பகுதியிலிருந்து அதிகளவில் ஆடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. அதேநேரத்தில் ஆடுகளின் விலையும் அதிகரித்தது. 10 கிலோ எடை கொண்ட இறைச்சி ஆடு □3 ஆயிரத்து 200க்கு விற்பனையானது.

வளர்ப்பு ஆடுகள் □3 ஆயிரத்து 100க்கு விற்றது. பிறந்து ஒரு மாதமே ஆன பெண்குட்டி □500க்கும், கிடா குட்டி □600க்கும் விற்பனையானது. கடந்த மாதங்களில் புரட்டாசி விரதம், அமாவாசை உள்ளிட்ட வழிபாடுகளால் சந்தையில் ஆடு விலை இறங்கு முகமாக இருந்தது. வெள்ளிக்கிழமைக்கு மறுநாள் தீபாவளி பண்டிகை வந்தது. அன்றைய தினம் பெருமாள் பக்தர்கள் விரதம் கடைபிடித்த நிலையில், மறுநாள் ஐப்பசி அமாவாசையும் வந்தது.

இதனால், ஆடுகளின் கொள்முதல் குறைந்திருந்த நிலையில், தற்போது நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கோயில் பண்டிகை நடைபெற உள்ள நிலையில், ஆடுகளின் விலை உயரந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## வேளாண் தொழில்நுட்ப பயிற்சி

திருச்செங்கோடு: திருச்செங்கோடு அருகேயுள்ள சின்னமணலி ஊராட்சியில் கிராமப்புற வேளாண்மை பயிற்சி அனுபவ திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு புஞ்சை வேளாண்மை தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. இதில் பிஜிபி வேளாண் கல்லூரி மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்று, விளக்கி கூறினர். நிலப்போர்வை வகைகளான மண்போர்வை, தாள் போர்வை, பிளாஸ்டிக் மூடாக்கு, செங்குத்து மூடாக்கு ஆகியவை குறித்தும், பிரதிபலிப்பான்கள் முறை ஆகியவை பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

## தர்மபுரியில் 27.3 மிமீ மழை பதிவு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வந்தது. போதிய மழை இல்லாததால், வெயிலால் பொதுமக்கள் அவதிப்பட்டனர். மேலும் போதிய மழை இல்லாததால், மானாவாரியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் காய்ந்து வந்த நிலையில் விவசாயிகள் கவலையில் இருந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் மாவட்டத்தின் சில பகுதிகளில் லேசான மழை பெய்தது. இதனால் மாவட்டத்தில் குளிர்ச்சியான சீதோஷன நிலை உருவானது. இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர். மாவட்டத்தில் பெய்த மழை அளவு விபரம் (மில்லி மீட்டரில்) அரூர் 24.3, பாப்பிரெட்டிப்பட்டி 2, பென்னாகரம் 1 என மொத்தம் 27.3 மிமீ மழை பதிவாகியுள்ளது.

## இயற்கை சத்து நிறைந்த தீவனப்பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும் : அமைச்சர் அழைப்பு

ஓசூர்: இயற்கை சத்து நிறைந்த தீவனப்பயிர்களை சாகுபடி செய்து பயன்பெற வேண்டுமென விவசாயிகளுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். ஓசூரில் உள்ள கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் கோழிகளுக்கான தடுப்பூசியாளர் செயல்திறன் மேம்பாட்டு தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், இளநிலை பட்ட மாணவர்களுக்கு பணி நியமன ஆணை மற்றும் இடுபொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கழைக்கழக துணை வேந்தர் திலகர் தலைமை வகித்தார். கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை கல்லூரியின் முதல்வர் மணி வரவேற்றார். கலெக்டர் கதிரவன் முன்னிலை வகித்தார்.விழாவில் தமிழக கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் பாலகிருஷ்ணரெட்டி கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார். அப்போது, அவர் பேசியதாவது:

கிராமப்புறங்களில் நாட்டுக் கோழிகளை வளர்த்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும். 10 நபர்களுக்கு பணி நியமன ஆணையும், 6 பேருக்கு சான்றிதழ்களும், 5 கிராமப்புற ஏழை பெண்களுக்கு நாட்டுக்கோழி குஞ்சுகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இயற்கை சத்து நிறைந்த தீவனப்பயிர்களை சாகுபடி செய்து விவசாயிகள் பயன்பெற வேண்டும்.இவ்வாறு அமைச்சர் பேசினார்.

முன்னதாக பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள வகுப்பறைகள் ஆய்வு செய்தார். மாணவ, மாணவியர்களிடையே உணவுத்தரம் மற்றும் குறைபாடுகள் குறித்தும் கேட்டறிந்தார். நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் விஜயகுமாரன், மாவட்ட கால்நடைப்பண்ணை துணை இயக்குநர் சிவகிருஷ்ணன், அதிமுக நகர செயலாளர் நாராயணன், மாவட்ட பிரதிநிதி சிட்டி (எ) ஜெகதீஷ், முன்னாள் கவுன்சிலர்கள் வாசுதேவன், செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மை கல்லூரியின் பேராசிரியர் சம்சுதின் நன்றி கூறினார்.